ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1760/50 - 2012 ජූනි මස 01 වැනි සිකුරාදා - 2012.06.01

*1760/50 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்கச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 111 இன் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, சுங்க கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 111 இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தென் மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகமானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒரு துறைமுகமாக அமைதல் வேண்டும் என்பதுடன், அதன் எல்லைகள் இங்குள்ள அட்டவணை "அ" இல் குறிப்பிடப்படுவதனைப் போன்று அமைதல் வேண்டுமென இவ்வொழுங்கு விதி மூலம் பிரகடனப்படுத்துகின்றேன். அத்துடன் அட்டவணை "ஆ" இல் குறிப்பிடப்பட்டிருக்கு பிரதேசம் அதில் குறிப்பிடப்படும் எல்லைகளுள் சரக்குக் கப்பல்கள் தரித்தல் மற்றும் பண்டங்களை ஏற்றி, இறக்கல் தொடர்பில் சட்டரீதியான இறங்குதுறையாக அமைதல் வேண்டும் என்பதுடன், அம்பாந்தோட்டைத் துறைமுக எல்லையினுள், அந்த இறங்கு துறைக்கான எல்லைகளும் அதன் அளவீடுகளும் அட்டவணை "அ" இல் குறிப்பிடப்படுவதனைப் போன்று அமைதல் வேண்டுமெனவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,<br>
சனாதிபதி<br>
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>
கொழும்பு - 01,<br>
2012, யூன் 01.

### அட்டவணை "அ" - அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் துறைமுக எல்லை

காணிப்பிரதேசம் - அனுமதி வழங்கப்பட்ட நில அளவையாளர் எஸ். ஆர். இலேபெருமாச்சியினால் தயாரிக்கப்பட்ட எஸ்/எம் ஐ எஸ்/381 ஆம் இலக்கமுடைய 2008.09.15 ஆந் திகதிய வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு துண்டு இலக்கம் "ஏ" எனக் குறிப்பிட்டுள்ள காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : மகாவலி அதிகார சபையின் காணி (எல் 12 முதல் எல் 13 வரையிலான கோடு) பாதை (நெடுஞ்சாலை) மற்றும் ஆரபொக்க பாதை ;

கிழக்கு : பாதை (நெடுஞ்சாலை), லேவாய எகொடஹ பகுதி (எல் 15 முதல் எல் 16 வரையிலான கோடு), ஆரபொக்க பாதை, பாதை (பிரதேச சபை), எல. ஆலோகபுர பாதை, டாகர்ட் பாதை, பாதை (நெடுஞ்சாலை), மேஜரின் தோட்டப் பகுதி (எல் 17, எல் 18 எல் 19 எல் 20 வரையிலான கோடு) ;

தெற்கு : எல, பாதை (பிரதேச சபை) ஆலோகபுர பாதை, டாகர்ட் பாதை, உயர் நீர்க்கோடு, மிரிஜ்ஜவில காட்டின் ஒரு பகுதி (எல் 2, எல் 3, எல் 4, எல் 5, எல் 6, எல் 7, எல் 8, எல் 9, எல் 10 ஊடாக எல் 1 முதல் எல் 11 வரையிலான கோடு) மற்றும் 100 அடிப்பாதை (நெடுஞ்சாலை) ;

மேற்கு : மிரிஜ்ஜவிலக் காட்டின் ஒரு பகுதி ( எல் 2, எல் 3, எல் 4, எல் 5, எல் 6, எல் 7, எல் 8, எல் 9, எல் 10 ஊடாக எல் 1 முதல் எல் 11 வரையிலான கோடு ) மற்றும் 100 அடி பாதை (நெடுஞ்சாலை),மகாவலி அதிகார சபையின் காணி (எல் 12 எல் 13 முதல் எல் 14 வரையிலான கோடு).

**அட்டவணை "ஆ" - அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பெயர் குறிக்கப்பட்ட சட்டரீதியான இறங்குதுறைகள்**

| இறங்கு துறைகளின் பெயர் | நீளம் (மீற்றர்) | எல்லை | திசை | ஆள்கூற்றுத் தளம் | |
|---|---|---|---|---|---|
| | | | | வடக்காக | கிழக்காக |
| பொது நோக்கு கப்பல் தரிப்பிடம் | 600 | வடக்கு | வடக்கிற்கு $180^0$ | 403,510.130 | 535,797.251 |
| | | தெற்கு | | 402,910.130 | 535,797.251 |
| சேவைக்குரிய கப்பல் தரிப்பிடம் | 105 | வடக்கு | வடக்கிற்கு $180^0$ | 402,910.130 | 535,797.251 |
| | | தெற்கு | | 402,805.130 | 535,797.251 |
| எண்ணெய் கப்பல் தரிப்பிடம் | 310 | வடக்கு | வடக்கிற்கு $180^0$ | 403,291.238 | 536,597.251 |
| | | தெற்கு | | 402,981.238 | 536,597.251 |
| புதிய எண்ணெய் கப்பல் தரிப்பிடம் | 300 | வடக்கு | வடக்கிற்கு $347^0 35' 20''$ | 402,976.798 | 536,597.251 |
| | | தெற்கு | | 402,683.808 | 536,661.727 |

6- 1082

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.